IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 36 /2014

Deposition of witness for PW1

Name : மல்லிகா Caste : -

Father's Name: ரவி Calling : -

Village : ஜாப்ராபேட்டை. Religion : இந்து

Taluk : - Age : 49

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 19 day of December , 2018.

Cross Continuation

நான் தற்பொழுது ஜாப்ராபேட்டையில் வசித்து வருகிறேன். நான் என் அண்ணன் வாரிசுகள் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். எதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் வழக்கு சொத்து என்னுடைய தாத்தாவின் சொத்து அதனால் பாகம் கோரி வழக்கு தொடுத்துள்ளேன். நான் பிரதிவாதிகளுடன் தற்பொழுது ஒன்றாக இருக்கிறேனா என்றால் நான் ஜாப்ராபேட்டையில் வசிக்கிறேன். அவர்கள் ஊரில் வசிக்கிறார்கள் இருப்பினும் சொத்துக்களை ஒன்றாக அனுபவித்து வருகிறோம். நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகளுடன் இணைந்து நான் ஒரு கூட்டுக்குடும்பத்தை உருவாக்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கு என்ன அர்த்தம் என்றால் சொத்துக்கள் இன்னும் என்னுடைய தாத்தா பாலமந்திரியின் பெயரில் தான் உள்ளது அதை நாங்கள் கூட்டாக அனுபவிக்கிறோம் அதை தான் நான் குறிப்பிட்டுள்ளேன். நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் எனது தாத்தா பாலமந்திரிக்கு 4 மகன்கள் என்றும் தாத்தாவின் காலத்திற்கு பிறகு மேற்படி அவரது 4 மகன்களும் தாத்தாவின் சொத்தை பாகப்பிரிவினை செய்துகொண்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி பாலமந்திரியின் மகனான எனது தந்தையார் கோவிந்தமந்திரிக்கு மேற்படி பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்துக்களை

அவர் தான் அனுபவித்து வந்தார். எனது தந்தையாருக்கு மொத்தம் 5 பிள்ளைகள் அவர்கள் சுப்பிரமணி, பொற்கொடி, கிருஷ்ணவேணி, தனபாக்கியம் மற்றும் நான் மல்லிகா. சுப்பிரமணி எனது அண்ணன் ஆவார். சுூப்பிரமணி தற்பொழுது இறந்து விட்டார். அவர் என்று இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சுப்பிரமணி எனது தந்தைக்கு ஒரே மகனாவார். பிரதிவாதிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் மேற்படி சுப்பிரமணியத்திற்கு வாரிசுகள் ஆவார்கள். எனக்கு திருமணம் எப்பொழுது நடந்தது என்றால் தேதி தெரியாது எனினும், திருமணம் ஆகி 30 ஆண்டுகள் முடிந்துவிட்டது. நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் எனது தந்தையார் காலத்தில் எனது தந்தையார் 12.04.1989-ம் ஆண்டு எனது தாயார் ஜெயம்மாளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஒன்றை எழுதியதுபோல் பிரதிவாதிகள் போர் ஜரியாக தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. 30.09.1993-ல் எனது தந்தை எனது அண்ணன் சுப்பிரமணிக்கு ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்ததாகவும் அது போர்ஜரி உயில் ஆவணம் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உயிலும் பதிவு செய்யப்பட்ட ஒரு ஆவணம் என்றால் தெரியாது. 1979-ம் ஆண்டு எனது அண்ணன் சுப்பிரமணி எனது தந்தையாருக்கு ஒரு விடுதலைப்பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதாக நான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி விடுதலைப்பத்திரம் எதற்காக என்றால் எனது அண்ணன் எனது தந்தையார் சொத்துக்களில் அவருக்கும் அவரது வாரிசுகளுக்கும் பங்கு இல்லை என எழுதி கொடுத்துவிட்டார். மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விடுதலைப்பத்திரத்தில் எனது அண்ணன் தாத்தா சொத்தில் தனக்கு பங்கு வேண்டாம் என்று எனது அப்பாவிடம் எழுதி கொடுத்தார். 31.07.1991-ல் எனது தாயார் ஜெயம்மாள் என் பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால்

இல்லை. எனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாத காலத்தில் அவருக்கு நான் ரூ.12,000/- மருத்துவ செலவிற்கு கொடுத்ததற்காக ஒரு பாதுகாப்பிற்காக மேற்படி பத்திரத்தை எழுதி கொடுத்தார்.

குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.